ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

புண்ணிய பாபரூபமான அதிருஷ்டமென்று ஒன்றுறைச்சாஸ்திரம் கூறுகின்றது. அது ஒவ்வொருவனுக்கும் ஒரேவிதமாய் உள்ளதல்ல. வெவ்வேறு விதமாகவே தானிருக்கவேண்டும். அதனாற்றான் பிரபஞ்சத்தில் பிராணிகள் ஒரேவிதமான பலனை அனுபவிப்பதாகக் காணப்படவில்லை. இது உலக நியாயத்திற்கு ஒத்ததே. ராஜாங்கத்தில் நல்ல காரியத்தைச் செய்து மகாராஜாவின் ப்ரஸாதத்திற்குப் பாத்திரமாயிருப்பவன் தன் கார்யத்திற்குத்தக்கபடி நல்ல பலனைப்பெற்று சுகப்படுவதாகவும், கெட்ட காரியத்தை செய்து அவனது கோபத்திற்காளாயிருப்பவன் தனது தீய தொழிலுக்குத் தக்கபடி தண்டிக்கப்பட்டு கஷ்டப்படுவதாகவும் காணப் படுகின்றது. இது பொருத்தமுடையதென்றே யாவராலும் அனுமோதிக்கப்பட்டு வருகின்றது. அதுபோலவே இந்த ஜகத்திற்கு அதிபதியான பரமேசுவரனும் பிராணிகள் செய்த புண்ணிய பாபானுகுணப் பலனைப்பிரித்து அளிக்கின்றாரென்ற சாஸ்திர ஸித்தாந்தம் யுக்தமானதே. ஆகவே விசித்ரமாக பலனையனுபவிக்கின்ற பிராணிகள் பலவிதமான காரியங்களைச் செய்திருக்கவேண்டும். அதிலும் நல்லகாரியங்களென்பதும் பல பிரிவுகளுள்ளதாயிருக்க வேண்டும். அதுபோலவேகெட்ட காரியங்களிலும் பலபிரிவுகளிருக்கவேண்டும் ஏனெனில் நல்ல பலன்களிலும் கெட்ட பலன்களிலும் பற்பல தாரதம்யங்கள் காணப்படுகின்றன. ஒரு ஜன்மத்தில் செய்த கர்மங்களின் பலன் அதே பிறவியில் அனுபவிக்கக் கூடியதாயிராது. மஹாபாதகத்திற்கு நாய் முதலிய பிறவிகளின் பலன் அனுபவிக்க வேண்டியதாகச் சாஸ்திரம் கூறுகின்றது. அதை மானிட சரீரத்தாலேயே அனுபவிக்க முடியாதல்லவா. மகா புண்ணிய கர்மாவுக்கு சுவர்க்கம் முதலிய மேலுகத்தில் பலன் கிடைக்குமாம். அதை மானிட லோகத்திலேயே மானிடசரீரத்தாலேயே எவ்வாறு அனுபவிக்கமுடியும்? ஆகவே ஒரு ஜன்மத்தில் செய்த கார்ரியங்களின் பலன் ஜன்மாந்தரத்தில் நேருமென்றே அங்கீகரிக்கவேண்டும். (அவ்வாறாயின் முன் ஜன்மங்களில் செய்யப்பட்டுள்ள நல்வினை தீவினைகளுக்குத் தக்கபடி சரீரப்ராப்தியும் அதனுள் ஜாதிப்பிரிவினையும்பிறப்பு முதற்கொண்டே சித்திப்பதாகக் கூறவேண்டும். ஜாதிப்பிரிவினைக்குத் தக்கபடி உயர்வும் தாழ்வும் பிறப்பினாலேயே ஏற்பட்டதாகவும் கூறவேண்டும். இப்படி சாஸ்திரசித்தாந்தமிருக்கையில் தற்காலத்தில் சிலர் ஜாதியை அடியோடு அழித்துவிடபெருமுயற்சி செய்துவருவது கலியின்வலிமையாலன்றி வேறில்லை. சில வருஷங்களாக ஆரியச்சிறுவர்களை வசப்படுத்திக்கொண்டு அவர்கள் மூலமாய் ஜாதியை அழிக்கச்செய்த முயற்சி அவர்கள் எதிர்பார்த்திருந்தபடி பயனையளிக்காமற் போனதிலிருந்து ஆர்யச்சிறுமிகளைக்கலைத்தாலன்றி காரியம் கைகூடாதெனக் கொஞ்சநாளாக கன்னிகைகளையும் கலைக்கத் தலையெடுத்திருக்கிறார்கள். அந்த வலையில் சிக்கிக்கொள்ளாமல் யாவரும்குழந்தைகளை இரக்ஷிப்பாராக.) சுபம்! பத்திராதிபர்.

---

# ஜன்மத்தாற்றான்-ஜாதிபேதம்.

அனாதி காலமாக ஸனாதன மதத்தில் ஜாதிபேதம் ஜன்மத்திலேயே ஏற்பட்டுள்ளது என்ற சாஸ்திர ஸித்தாந்தத்தையொட்டி ஸேதுவரை இமயமலைவரை பாரதநாட்டார்களால் இன்றுவரை அது அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. எக்காரணம் பற்றியோ இதிற்சிலருக்கு த்வேஷமேற்படடு ஜாதிபேத வார்த்தை காதில் விழாவண்ணம் செய்துவிடவேண்டுமென்று சில கூட்டத்தார் கிளம்பி, லௌகிகமான சில திருஷ்ட பலன்கள் வந்துவிடப் போகிறதாகப் புகட்டி சிறுவர் சிறுமிகளின் சித்தத்தைக் கலக்கி வருகிறார்கள். அதற்கு நம் ஸனாதனதர்மிகள் என்று பெயர் வைத்துக்கொண்ட சிலருமிடங்கொடுத்து வருகிறார்கள். அதன் பயனாக தற்போது மேல்கீழ் என்றமுறையேயில்லாமல் கண்டவர் கண்டபடியெல்லாம் பேசவும், பத்திரிகைகளில் பிரசுரிக்கவும். பார்க்கின்ற புத்தி வலிமையில்லாதவர்களுக்குப் புத்தி சஞ்சலப் படுகின்றது. பூர்வஜன்ம கிருதமாயுள்ள நல்வினை தீவினை காரணமாகவே சரீரமெடுத்த ஜீவர்களுக்கு உயர்வு தாழ்வுமுண்டென நம்புவதில்லை. இத்தகைய பேதபுத்தி ஏதோ சிலவகுப்பார் சேர்ந்துசெய்து வழக்கத்திலும் கொண்டுவந்துவிட்டதாகவே நம்புகிறார்கள். அவர்களுக்கிதுகூறுவாம். ஸ்தாவரம்-ஜங்கமம் எனப்படும் பொருள்களிடத்து இப்பேதம் பல விடங்களிலும் காணப்படுவது பிரத்தியக்ஷாநுபவமன்றோ! ஓரினத்துக்குள்ளேயே உயர்வு தாழ்வு காணப்படுவது கண்கூடன்றோ! இந்த வேறுபாடுகள் எதனால் நேரிட்டனவென்று ஆராயுங்காலத்து பூர்வஜன்ம கர்மவசமென்பதேயன்றி வேறு ஸமாதானம் பயன்படாது. அவைகள் எந்தக்கன்மங்களைச்செய்து அத்தன்மை எய்தின. பசு பிறந்து வளர்ந்து தவஞ்செய்து கபிலை (காராம்பசு) முதலிய ஜாதிபேதங்களாயின. அவற்றுள் உயர்வு தாழ்வுகூறப்

படுவதும் கொண்டாடப்படுவதும் யாது கன்மத்தை முன்னிட்டு என்று ஆலோசித்தால் அவை பிறந்த பிறகு கர்மம் செய்தல் பிரத்தியக்ஷத்திற்கு ஒவ்வாமையால் அது பூர்வஜன்ம கர்மமென்றே கொள்ளவேண்டும். அங்ஙனங்கொள்ளுங்கால் உயர்வும் தாழ்வும் ஜீவராசிகட்குக் கர்ப்பத்திலேயேகூட உற்பத்தியாவதன்றிப் பிறந்தபின் சேகரிக்கக்கூடியதல்லவென்பது நன்கு துலங்குகின்றது. இரத்தினங்கள் முதலியவற்றில் நான்குஜாதி பகுக்கப்பட்டதாக முன்கூறினேம். அது சுபாவத்திலேயே அமைந்துகிடக்குங்குணவிசேஷம் பற்றியேயன்றி அவை பிறந்தபின் செய்த கர்மம் காரணமல்ல. அதுபோலவே மனிதரிடத்தும் கொள்ள வேண்டியது நியாயமேயன்றி தற்காலத்தியவர் வியவஹரிக்கும் வண்ணம் கொள்வது நியாயமில்லை. ஜன்மத்தால் ஜாதியில்லை என்று வழக்கிட்டு மறைநெறி பிறழ்வது சாஸ்திர ஸம்மதமாமோ? சுருதி, ஸ்மிருதி, புராணம், இதிஹாஸம், முதலிய ஸகல கலைகளும் ஒரே அபிப்பிராயமாகப் பூர்வகர்மார்ஜித புண்ணிய பாபங்களுக்குத் தக்கவாறே உயர்ந்ததும் தாழ்ந்ததுமான சரீராதிகளை பிராணிகள் பெறுகின்றனவென்றும், அதனால் பிராமணாதி நான்கு வர்ணங்களும் அனாதி சித்தமென்றும், அவற்றுள் உயர்குலத்தில் புண்ணியாத்துமாக்களும், இழிகுலத்தில் பாபாத்துமாக்களும ஜனிப்பார்களென்று பலவிடங்களில் முறையிடுகின்றன, அவற்றுக்கெல்லாம் விரோதமாக வாயில் வந்தபடி உளரித்திரிகிறார்களே அது நியாயமாகுமாவென்று விவேகிகள் கவனிக்க வேண்டும். இத்தகைய புனிதமான சுத்த ஜாதிபேதம் சுத்த வைதிகமுறையில் தம்பதிகளாகச் சேர்ந்த ஸ்திரீ புருஷர்கள் மூல மேற்படுவதாகக்கூறும் நமது சாஸ்திர சித்தாந்தத்தைச் சீரழியச் செய்துவிட அதற்கடிப்படையான விவாஹத்தையேவிலக்கிவிடச் சிலர் சட்டம் கொண்டுவரப்பார்க்கிறார்களாம். அதற்கெல்லாம் இடங்கொடாமல் நம் ஸனாதனதர்மிகள் சாசுவத வழியிலேயே நிலைத்திருந்து நன்மையடைவார்களாக.

சுபம் !

---

பத்திராதிபர்.

॥ श्री गुरुचरणाभ्यां नमः ॥

# சிவாலய விவாக விமர்சம்.

यद्वस्तु सृष्टिसमये विधिरित्यभिख्यां
संरक्षणे हरिरिति प्रळये च काले ।
गौरीशइत्यपि दधात्यभिधां त्रिधा तत्
एकं मदीयहृदये विलसत्वनादि ॥

எனது நண்பரொருவரைச் சந்திக்கவேண்டி அவரில்லம் செல்லுங்கால் அங்கிருந்த மாத்வமித்திரன் பேபர் சஞ்சிகை ஒன்றைக் கண்டேன். அது சென்ற பிரமோதூவருஷத்தில் புரட்டாசி மாதத்தில் பௌர்ணமியில் வெளிவந்த சஞ்சிகை. அதில் சிவாலய விவாகம் எனத் தலையங்கமிட்டு ஒரு விஷயம் வரையப்பட்டிருக்கின்றது. அது சிவனென்றும் விஷ்ணுவென்றும் வேற்றுமை பாராட்டாத ஸமரசபுத்தியையுடைய ஆஸ்திகர்களின் மனதுக்கு வருத்தத்தை உண்டுபண்ணுகிறது. ஆகையால் அதைப் பற்றி கொஞ்சம் விசாரிக்க முன் வருகிறோம்.

கும்பகோணம் சோலையப்பமுதலியார் தெருவிலுள்ள ஸ்ரீ காசிவிசுவநாதஸ்வாமி கோயிலில் இப்பால் ஒரே நாள் விவாகங்கள் நடத்தப்பட்டுவருவதாய்த் தெரியவருகிறது. சாஸ்திரீயமான இந்தக்காரியத்தை வேடிக்கையாக எண்ணி ஒரே நாளில் நடத்துவது சரியல்லவென்றும் திருநாகேசுவரத்தில் நடக்கும் ஒரே நாள் விவாகமும் சரியான முறையல்ல சாஸ்திரவிரோதமானதென்று சிலர் ஆக்ஷேபிப்பதாகவும் வேறு பத்திரிகையில் வெளிவந்திருப்பதாகக் கூறி பிறகு நித்யநைமித்திகம் முதலான கர்மங்களை திவ்ய க்ஷேத்திரங்களில் பகவன்மூர்த்திகளின் ஸன்னிதியில் ஸங்கோசப்படுத்தலாமென்கிற அனுமதியை ஏற்றுக்கொண்டு "கலௌ வேங்கட நாயக:" என்று ஸ்வயம் வியக்த ஸ்தலமாகிய ஸ்ரீ வேங்கடேசனுடைய ஸன்னதியில் விவாகாதிகள் ஒரு நாளில் நடக்கப்பட்டு சிஷ்டாசாரத்தில் வந்திருக்கின்றன. அதை அனுசரித்து இதர ஸ்ரீநிவாஸ க்ஷேத்ரங்களிலும் இம்முறை அனுசரிக்கப்படுகின்றது என்று கூறப்பட்டிருக்கின்றது.

இங்கு திவ்யக்ஷேத்திரங்களில் பகவத்ஸந்நிதியில் சாஸ்திரீயங்களான நித்ய நைமித்திக கர்மாக்களை ஸங்கோசப்படுத்தலாம் என்கிற அனுமதியை ஏற்றுக்கொண்டு ஈன்று எழுதப்பட்டிருக்கிறது.

சில கர்மாக்களை மாத்திரம் அதிகாரி காலம் சக்தி இவைகளை அனுசரித்து ஸங்கோசப்படுத்தலாமென்று சாஸ்திரங்கள் சாற்றுகின்றனவே அன்றி பகவத்ஸன்னதியாயிருந்தால் நான்குநாள் செய்யவேண்டிய கர்மமானது ஒருநாள் செய்தால்போருமென்று சுருதியிலா ஸ்மிருதியிலா புராணத்திலா எந்த சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

அவ்விதம் பிரமாணம் இருந்தால் அதையும் அற்பம் ஏன் காண்பித்திருக்கக் கூடாது. அவ்விதமிருந்தாலும் அந்த சாஸ்திரங்கள் வெங்கிடேசுவரர் ஸன்னிதியிலும் ஸ்ரீனிவாஸன் சன்னதியிலும் தான் செய்யலாம், பரமேசுவர ஸன்னதியாயிருந்தாலங்கு செய்யக்கூடாதென்றும் செப்புகின்றனவா? அதிலும் ஒருநாளில் விவாகாதிகளைச் செய்யக்கூடாதென்று சொல்லுகின்றனவா அல்லது விவாகாதி கர்மாக்களையே அந்த சன்னிதியில் செய்யக்கூடாதென்றோ? அவசியம் அறிவிக்கவேண்டிய இந்த விஷயங்களை ஸ்பஷ்டமாக அறிவிக்காமல் நம் நண்பர் மௌனம் சாதித்துவிட்டார்.

ஆனால் சாஸ்திரங்களில் வசனரூபமாக இல்லாவிட்டாலும் சிஷ்டாசாரத்தையும் சாஸ்திரங்களில் பிரமாணமாகக் கொண்டிருப்பதால் அந்தப்பிரமாணத்தால் நாங்கள் சொல்லுகிறோமென்று அபிப்ராயப்படலாம், "சிஷ்டாசாரத்தில் வந்திருக்கின்றன. அதை அனுஸரித்து" என்று பூர்வபக்ஷியால் கீழ் கூறப்பட்ட வாக்கியத்தாலும் இக்கருத்துத் தான் வெளியாகின்றது.

யாராகிலும் ஒருவர் ஒரு காரியத்தைச் செய்துவிட்டால் அது சாஸ்திரவிதிக்குச்சரியாயில்லாமல் விரோதமாயிருந்தாலும் நமக்கு அதில் பிரியமிருந்தால் அது சிறந்த கர்மாவென்றும் அதை அனுஷ்டித்தவர் சிஷ்டர் என்றும் தைர்யமாய்க் கூறுகிறோம். இவ்விதமுறைப்பது சாஸ்திரங்களுடைய கருத்துக்கு ஒற்றதாகமாட்டாது. சாஸ்திரத்தில் சிஷ்டாசாரத்தையும் பிரமாணமாக அங்கீகரித்திருக்கிறார்கள். சிஷ்டாசாரம் என்கிற வாக்யத்திலிருக்கும்

சிஷ்டபதத்திற்கு மஹரிஷிகளே இலக்கணமும் கூறியிருக்கிறார்கள். அதாவது காமம் க்ரோதம் லோபம் முதலான தோஷங்களற்றவர்களும் அஹங்காரமில்லாதவர்களும் ஸகல ஜனங்களுக்கும் மித்திரர்களாயும்,

**धर्मशास्त्ररथारूढा वेदखड्गधरा द्विजाः ।**

**क्रीडार्थमपि यद्ब्रूयुः स धर्मः परमः स्मृतः ॥**

தர்மசாஸ்திரமென்கிற ரதத்திலேறிக்கொண்டு வேதமாகிற கத்தியைக் கையிலேந்திய த்விஜர்கள் விளையாட்டாக ஒன்றைச் சொன்னாலும் அது சிறந்த தர்மமாகும் என்று இவ்வாறு சிஷ்டர்களுடைய இலக்கணத்தை போதாயனர் முதலிய மஹரிஷிகள் வெளியிட்டிருக்கிறார்கள். இதைக்கவனித்தால்தற்காலத்தில் இவ்வித இலக்கணமுடைய சிஷ்டர்கள் மிகவும் அரிதே.

யாராவது சிலர் விதிக்கு முரணாக தமக்கு ஆபத்து நேருங் காலத்திலோ, அல்லது ஒன்றையடைய வேண்டுமென்கிற அவாவின் மேலீட்டாலோ தமது இஷ்டம் பூர்த்தியானால்பகவானுடைய சன்னிதியில் வந்து ஒரு கர்மாவை அனுஷ்டிப்பதாகப் பிரார்த்தித்துக்கொண்டு கார்யஸித்தி ஏற்பட்டவுடன் சாஸ்திர விரோதமாக அவர்கள் ஒரு கர்மாவை அனுஷ்டித்துவிட்டால் அது ஸத்கர்மானுஷ்டானமாகுமா. அவர்கள்தான் சிஷ்டர்களாவார்களா. நான்கு நாளில் நடத்த வேண்டுமென்று ஸ்பஷ்டமாய் சாஸ்திரங்களால் கூறப்பட்ட கர்மாக்களை சிஷ்டனாயிருந்தால் ஒரு நாளில் தைர்யமாய் நடத்த எப்படி முன் வருவன். அவரவர்களுடைய சக்தியையும் காலஸ்திதியையும் அனுசரித்துக் கௌணமாக ஒரு கர்மாவை அனுஷ்டித்தால் அந்தக் கர்மமா சாஸ்திரீயமாவும் அவர்கள் சிஷ்டர்களாகவும் ஆகிறதாயிருந்தால் அவ்விதம் அனுஷ்டிக்கும் மற்றவர்களும் ஏன் அப்படி ஆகமாட்டார்கள். ஸ்ரீனிவாஸன் ஸன்னிதியில் சாஸ்திரவிரோதமான கர்மாவை அனுஷ்டிப்பவர்கள்தான் சிஷ்டர்கள். அந்தக்கர்மமானவையே விசுவநாதர் ஸன்னிதியில் அனுஷ்டித்தால் அவர்கள் சிஷ்டர்களல்ல. அந்தக்கர்மாவும் உபயோகமில்லை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவா? அல்லது ராஜாக்ஞை ஏற்பட்டிருக்கின்றதா? சாஸ்திரவிரோதமான காரியத்தை யார் அனுஷ்டித்தாலும் அது சரியல்லவென்றால் எந்தவிடத்தில் யார் அனுஷ்டித்தாலும் தவறுதான்

இக்காலத்தில் அவரவர்கள் சக்தியை அனுஸரித்து கௌணமாக அனுஷ்டித்தாலும் அதையும் நாம் அங்கீகரிக்கத்தான் வேண்டும் என்றால் வைதிகப்ரதிஷ்டையாய் ஆராதனம் நடக்கும் எந்த ஸந்நிதியில் அனுஷ்டித்தாலும் அதில் அற்பமேனும் வேற்றுமை இல்லை. அதையும் அங்கீகரிக்கத்தான் வேண்டும். இவ்விதமின்றி ஏதாவதொரு தேவதையிடம் தமக்கிருக்கும் ஆபாஸமான பக்தியால் அஹங்காரங்கொண்டு இதரதேவதையை நிந்திக்கவேண்டும என்கிற கெட்ட எண்ணத்தால் விசுவநாதர் ஸன்னிதியில் அனுஷ்டித்த விவாஹகர்மா ஸரியல்லவென்று கூறியதைத்தவிர்த்து இவர் சொல்லியதற்கு அற்பமேனும் ஆதாரமே கிடையாதென்பது திண்ணம்.

மேலும் சாஸ்திரவிரோதமான கார்யத்தை அனுஷ்டிக்கிறவர் எவ்விதமஹானாயிருந்தும் அது சிஷ்டாசாரமென்கிற பிரமாணம் ஆகமாட்டாது. இந்த அபிப்பிராயத்தையே,

धर्मं यो बाधते धर्मः स न धर्मः कदा च न ।
अविरोधी तु यो धर्मस्स धर्मस्सद्भिरुच्यते ॥
तस्माद्विरोधे धर्मस्य निश्चित्य गुरुलाघवम् ।
तयोर्भूयस्तनं विद्वान् कुर्याद्धर्मविनिर्णयमिति—व्यासः ॥
एवं स्मृत्याचारयोर्विरोधे स्मृतिर्बलियसी ।
श्रुतिस्मृतिविहितो धर्मस्तदलाभे शिष्टाचारः प्रमाणमिति ॥
वसिष्ठः ॥

சுருதிஸ்மிருதி முதலான பிரமாணங்களில் கூறப்பட்ட தர்மத்திற்கு விரோதமாக சிஷ்டாசாரமிருப்பின் அதை எடுத்துக் கொள்ளக் கூடாதென்றும் சாஸ்திரவிதிப்படியே அனுட்டிக்க வேண்டுமென்றும் வியாஸர் வஸிஷ்டர் முதலானவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகையால் தற்காலம் வெங்கடேசுவர ஸன்னிதியில் அனுஷ்டிப்பவர்கள் சாஸ்திர விரோதமாக செய்கிறபடியால் அவர்கள் சிஷ்டராக இருந்தாலும் அந்த அனுஷ்டானம் சிஷ்டாசாரமென்கிற பிரமாணமாக ஆகமாட்டா, சிஷ்டாசாரமில்லாததை சிஷ்டாசாரமாக ஸ்தாபித்து எழுதியதற்குச் சாஸ்திரத்தின் தத்வார்த்தத்தை நன்கு உணராததே காரணமாகும்.

முடிவுரையில் இவர் கூறியிருக்கும் வாக்கியத்தைக் கவனித்தால் சிவநிந்தை செய்வதில் அதிக உத்ஸாகமுள்ளவராகத் தெரி

கின்றது. ஸம்ஹாரமூர்த்தியான பரமசிவனுடைய ஆலயம் பூர்வக்ரியைகளைவிட அபரக்ரியைகளுக்கு சிரேஷ்டமாகும் என்பது எமதபிப்பிராயம் என்றும வெளியிட்டிருக்கிறார்.

இங்கு விவாகவிஷயமாய் தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தை ஒரு பிரமாணத்தையும் எதிர்பாராமல் தோன்றியபடி சிவாலயத்தில் விவாகாதி கர்மாக்களை அனுட்டிப்பது தவறு. விஷ்ணு ஆலயத்தில் அனுஷ்டிப்பது சரி என்று நிரூபித்தபிறகு விஷயத்தை முடிக்க வேண்டியிருக்க அவ்விதமின்றி சிவனுக்கும் சிவாலயத்திற்கும் குறை கூறவேண்டுமெனக் கருதி பிரகிருதத்திற்கு அவசியமில்லாத அபரக்ரியையை எடுத்துக்கொண்டு அதற்குச் சிவாலயம் சிறந்ததென்று இம்மஹான் அபிப்பிராயப்படுகிறாராம். எமதபிப்பிராயமென்று கூறியதைக்கொண்டு இதற்கு வேறு ஆகாரம் இல்லையென்று ஸ்பஷ்டமாய் தெரிகின்றது. சிவன் ஸம்ஹாரமூர்த்தியாகையால் அவருடைய ஆலயத்தில்தான் அபரக்ரியை செய்யவேண்டுமென்று வெகு சிரமப்பட்டு ஞானதிருஷ்டியால் அறிந்து லோகோபகாரத்தின்பொருட்டு வெளியிட்டிருக்கிறார். இவர்அபிப்பிராயத்தை கவனித்தால் ச்மசானத்தில்செய்ய வேண்டிய தகனம் முதலான காரியங்களையும் சிவாலயத்திலேயே செய்யலாமென்றும்கருதுகிறவராகத்தெரிகின்றது. விஷ்ணுவும்கோடிக்கணக்கான அசுரர்களை ஸம்ஹாரம் செய்திருப்பதால் அவருடைய ஆலயத்திலும் இந்தக்கர்மாவை ஏன் செய்யக்கூடாதோ தெரியவில்லை. இது அசுபகாரியமாகையால் அங்கு செய்வதில் நம் நண்பருக்கு இஷ்டமில்லையென்று தெரிகிறது. கல்யாண காரியங்கள் அங்கு செய்யலாமென்று முந்தியே அனுமதியளித்துவிட்டார். மனு யாக்யவல்க்யர் முதலான மஹரிஷிகள் கூட श्रुतिंपश्यन्तिमुनयः स्मरन्ति च तथास्मृतिं என்கிறபடி சுருதியை மூலமாக கொண்டு தர்ம வியவஸ்தை செய்திருக்கிறார்களேயன்றி எமதபிப்பிராயம் என்று சொல்ல அவர்களுக்கு தைரியமில்லை. அல்லது அதற்குவேண்டிய சிறந்த ஞானமில்லையோ யாம் அறியோம். கலிகால மகரிஷியாகத் தோன்றிய இவர் வெகு தைரியமாய் மற்றொன்றின் முகத்தை எதிர்பாராமல் தனக்கிருக்கும் சிவத்வேஷத்தை நன்குவெளியிடவேண்டி மனிதர்களுக்கு அவசிய அனுட்டிக்கவேண்டிய பூர்வாபர கர்மாக்களுக்கு வேண்டிய ஸ்தலங்களை தீர்மானமாகக் காட்டிவிட்டார்கள். அந்தோ! கலியின்விந்தை.

இதுவரையில் சேஷாசலத்திலிருக்கும் பகவத்ஸன்னிதியை ஸ்ரீ விஷ்ணுஸன்னிதி என்று நம் பூர்வபக்ஷிகருதிய அபிப்பிராயத்தையே நாமும் அங்கீகரித்து அவர் கூறியது ஸரியல்லவென்று விடையளித்தோம். உண்மையை விசாரித்தால் சேஷாசலம் ஆதியில் முருகக்கடவுளுடைய ரூபமான ஸதாசிவருடைய ஸன்னிதியாக விளங்கிவந்தது. அந்த ஸன்னிதியை இக்கலியில் ராமானுஜீயர்களால் ஸ்ரீனிவாஸன் ஸந்நிதியாகக் கற்பித்து அதற்குற்றவாறு அம்மூர்த்திக்கு வேஷம் அலங்காரம் முதலானவைகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விதமுறைப்பதற்கு யாது ப்ரமாணமென்றால் கூறுவாம்.

नीलाद्रौ वेङ्कटेशाख्यं, स्कन्दरूपं सदाशिवं नीलाद्रौ ॥

அஞ்சனுசலத்தில் அதாவது சேஷாசலத்தில் திருப்பதியில் வேங்கடேசர் எனப் பெயர்வாய்ந்த ஸ்ரீ ஸ்கந்தரூபமான பரமேசுவருடைய மூர்த்தி விளங்குகின்றது என்பது முதலான வசனங்கள் சிவரகஸ்யத்திலிருக்கின்றன, இதுபோன்ற ப்ரமாணவசனங்களால் சேஷாசலம் ஸ்ரீ பரமேசுவருடைய ஸன்னிதியென்று ஸ்பஷ்டமாய் அறியப்படுகின்றது.

இந்த அபிப்பிராயத்தையே விச்வகுணாதர்சம்என்கிற கிரந்தத்தின் முடிவிலுள்ள जयतुजगति लक्ष्मणार्यपक्षोजयतु वचः என்கிற சுலோகத்தின் வியாக்யானத்தில் ஸ்ரீ சுப்பராஸாஸ்திரிகளும் நன்கு நிரூபித்திருக்கிறார்கள். இதினால் நம் நண்பரால் அங்கீகரிக்கப்பட்ட சிஷ்டாசாரரூப பிரமாணமானது உண்மையில் சேஷாசலத்தில் (திருப்பதியில்) ஸ்ரீ பரமேசுவரன் சன்னிதியில் அனுஷ்டிக்கப்படுகின்றதாக ஏற்படுகிறதேயன்றி விஷ்ணுஸன்னிதியிலில்லை என்று நன்றாய் வெளியாகின்றது. திருப்பதியில் ஸ்ரீ பரமேசுவரன் ஸன்னிதியில் அனுட்டிக்கப்படும் சிஷ்டாசாரப்ரமாணத்தால் அதுபோன்ற விசுவநாதர் நாகேசுவரர் முதலான சிவ ஸன்னிதியில் செய்வது மாத்திரம் கௌணமாகவாவது நியாயமாகுமேயல்லாமல் ஸ்ரீனிவாசர்முதலிய விஷ்ணுஸன்னிதியில் விவாககர்மாவை ஒருநாளில் அநுஷ்டிக்க சிஷ்டாசாரரூபப்ரமாணம் கிடைக்கவில்லை. தத்வார்த்தம் இவ்விதமிருக்க உண்மையை அறியாமல் நேர் விபரீதமாய் விசுவநாதருடையஸன்னிதியில்செய்யக்கூடாது. ஸ்ரீனிவாஸன் ஸன்னிதியில் செய்யலாமென்று தைரியமாய் எழுதியதற்குக் காரணம் இவரையேதான் வினவவேண்டும்,

விஷ்ணுவினிடத்தில் தமக்கிருக்கும் அபிமானத்தின் ஆதிக்கத்தால் அதிகமான சிவத்வேஷங்கொண்டு சிவநிந்தை செய்வதால் விஷ்ணுவினுடைய அனுக்ரஹத்தை அதிகம்பெறலாமென்று போல சிவநிந்தை செய்திருக்கும் நண்பருக்குமறுமொழியுரைத்து போதபுத்தியை விலக்கவேண்டுமென்கிற நோக்கத்துடன் யக்ஷானுரூபம்பலி என்கிற நியாயத்திற்கிணங்க எம்மாலும் பேதபுத்தி வேடம் தரிக்கப்பட்டு சிவஸன்னிதியில் தான் செய்யவேண்டும். விஷ்ணுஸன்னிதியில் கூடாதென்று கூறப்பட்டதேயன்றி உண்மையில் சிவனிடமோ விஷ்ணுவிடமோ அவர்களின் ஸன்னிதிகளிலோ அற்பமேனும் மேல் கீழ் என்கிற பேதபுத்தி எமக்கில்லை. இந்த அபிப்பிராயத்தை இதின் துவக்கத்தில் எழுதியுள்ள சுலோகத்தின் கருத்தாலும் வெளியிட்டிருக்கிறேன். சாஸ்திரங்களிலும் பேதபுத்தியும் தேவதாநிந்தையும் கூடாதென்றும் அவ்விதமிருப்பவர்கள் கொடிய நரகதுக்கத்தை அனுபவிக்கிறார்களென்றும் பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

मद्भक्तश्शङ्करद्वेषी मद्द्वेषी शङ्करप्रियः ।
द्वाविमौ नरकं यातः यावच्चन्द्रदिवाकरौ ॥ शेषधर्मम् ॥

என்னிடம் பக்தனாயிருந்து சங்கரரை த்வேஷிப்பவனும் சங்கரரிடத்தில் பக்தனாயிருந்து என்னை த்வேஷிப்பவனும் சந்திரன் சூர்யன் இவர்களுள்ளவரையில் நரகதுக்கத்தை அனுபவிக்கிறான் என்று சேஷதர்மத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

तस्मान्मां त्वां विधातारं ये मूढा भेदबुद्धितः ।
पश्यन्ति नरकं यान्ति यावच्चन्द्रदिवाकरम् ॥

எந்த மூடர்கள் பிர்மாவிஷ்ணுமஹேசுவரன் இவர்களை பேதபுத்தியுடன் பார்க்கிறார்களோ அவர்கள் வெகுகாலமாய் நரகத்தில்வசிக்கிறார்கள் என்று ஸ்காந்தத்தில் சிவனிடம் விஷ்ணு அறிவிக்கிறார்.

இவ்விதம் பவிஷ்யோத்தர புராணம், விஷ்ணுபுராணம், பாகவதம், பாரதம் பத்மபுராணம் முதலிய கிரந்தங்களிலும் விரிவாய் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் தேவதாநிந்தை ஒரு சமயமும் செய்யக்கூடாது. வெங்கடேசர் ஸன்னிதிக்கும் விசுவநாதர் ஸன்னிதிக்கும் சாஸ்திரீயமாய் யாதொரு பேதமுமில்லாதிருக்கும்போது ஒரு ஸன்னிதியில் விவாககர்மாவையும் மற்றொரு ஸன்

னிதியில் அபாக்ரியையையும் செய்யலாமென்று தேவதாத்வேஷம் இல்லாதவனுயிருந்தால் பேபரில்வெளியிடத்துணிவானு? இவ்விதம் துராஹங்காரத்தால் தேவதா நிந்தைசெய்து சாஸ்திரங்களில் கூறப்பட்ட அதற்குற்ற பலத்தை அனுபவிக்கும் பாக்யம் பெற்றவர்கள் அதை வெளியிடாமல் எப்படியிருப்பார்கள்.

ஹே ஆஸ்திக மஹாஜனங்களே! சில துர்புத்திகள் தாம் சிவபக்தனென்று விஷ்ணுவைத் தூஷித்தும் விஷ்ணுபக்தனென்று சிவனைத்வேஷித்தும் தாறுமாறுய் பேபர்களில்வெளியிடும்கெட்ட விஷயங்களைக் கவனியாமல் ஸகல உலகங்களுக்கும் காரணமான வஸ்து ஒன்றே அந்த வஸ்துவானது காரியவசத்தால் அதாவது சிருட்டிக்கிற ஸமயத்தில் பிரம்மாவென்றும் ரக்ஷிக்கிற காலத்தில் விஷ்ணுவென்றும் ஸம்ஹாரகாலத்தில் ருத்திரனென்றும் வெவ்வேறுன பெயருடன் விளங்குகின்றதென்கிற சாஸ்திரத்தின் உட்கருத்தை அறிந்து அதற்கிணங்க எந்த ஸன்னிதியில் எந்தக்கர்மாவைச் செய்தாலும் பகவத்ஸன்னிதியில் தான் செய்கிறுமென்கிற மனேபாவத்துடன் பேதபுத்தியை விட்டு அபேதமாகப் பாவித்து சாஸ்திரவிதிக்குமாறுமல் அவரவர்கள் சக்திக்கியன்றவரையில் வர்ணுச்ரமங்களை நன்கனுட்டித்து ஸ்ரீ பகவானுடைய அனுக்ரஹத்திற்கு பாத்திராளாகும்படியறிவித்து இவ்விஷயத்தையும் இத்துடன் பூர்த்தி செய்துகொள்ளுகிறேன்.

சுபம்! சுபம்!

ஸமரஸவாதி,

---

# அத்வைதமதமே வைதிகம்

(476 பக்கத்தொடர்ச்சி)

ஆகையால் தர்மாதர்மலக்ஷணம் ஸரியில்லை என்று ஆசங்கித்துக்கொண்டு,

वेदबोधितश्रेयस्साधनताकत्वं धर्मत्वम् ।

'வேதத்தினுல் இஷ்டஸாதனமென்று போதிக்கப்படுவது தர்மம்'

वेदबोधितानिष्ट साधनताकत्वं अधर्मत्वम् ॥

வேதத்தினுல் அனிஷ்டஸாதனமென்று போதிக்கப்படுவது அதர்மம் என்று தர்மாதர்மங்களின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது ஜ்யோதிஷ்டோமம் முதலியது இஷ்டஸாதனமென்று வேதத்தி

ளுல் போதிக்கப்படுவதால் தர்மம். களஞ்சபக்ஷணம் முதலியது அனிஷ்டஸாதனமென்று வேதத்தினுல் போதிக்கப்படுவதால் அதர்மம் என்று லக்ஷணஸமன்வயம் கண்டுகொள்க.

இந்த லக்ஷணத்தில் கிரியை என்று குறிப்பிடாதபடியால் கீழ்காட்டிய திரவ்யம் குணம் முதலியதிலும் தர்மாதர்ம லக்ஷணம் பொருந்தும். அப்யனுக்ஞாவிதி விஷயமாகிய அஸத்யவசனம் விதியினுல் இதில் தோஷமில்லை என்று மாத்திரம் போதிக்கப்படதே தவிர இது இஷ்டஸாதனம் என்று விதியினுல் தெரிவிக்கப்படவில்லை. பின்னையோவெனில் அது இஷ்டஸாதனம் என்று அவரவர்களின் ராகத்தினுலேயே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் இது இஷ்டஸாதனமென்று வேதத்தால் தெரிவிக்கப்படாதபடியால்விவாஹாதிகாலத்திலுள்ள அஸத்யவசனம் தர்மமாக ஆகமாட்டாது. அதில் தர்மலக்ஷணம் வரவில்லை. அது போல் ஷோடசிக்ரஹணமானது நிஷேதவாக்யத்தால் இது அனிஷ்ட ஸாதனமென்று தெரிவிக்கப்படவில்லை. நிஷேதவாக்யம் ஷோடசிக்ரஹணத்தை அனிஷ்ட ஸாதனமென்று தெரிவிக்கிறது என்று ஒப்புக்கொள்வதில் பிரமாணமில்லை அப்படி ஒப்புக்கொள்வது அனுவசியம். அப்படியானுல் அதை நிஷேதித்த நிஷேத வாக்யத்தின் கருத்து என்னவென்ருல் கூறுவாம். ஷோடசிக்ரஹணம் என்கிற ஓர் அங்கம் இல்லாமல் போனுலும் மற்ற அங்கங்களைக் கொண்டே அதிராத்ரம் என்னும் ஸோமயாகம் மஹோபகாரத்தைப் பெற்றுப் பூர்த்தியடைந்துவிடும். வைகல்யம் கிடையாது ஷோடசிக்ரஹணம் அவச்யம் யாகம் பூர்த்தியை அடைவதற்காகச் செய்யவேண்டுமென்பது கிடையாது என்று தான் அதை நிஷேதித்த நிஷேதவாக்யத்தின் கருத்து. நிஷேதவாக்யத்திற்கெல்லாம் பொதுவாகப் புருஷனை நிஷேதிக்கப்படும் விஷயத்திலிருந்து விலக்குவதுதானே பிரயோஜனம். அவ்விதம் விலக்குதல்நிஷேதிக்கப்படும் விஷயம்களஞ்சபக்ஷணம் முதலியது போல் அனிஷ்டஸாதனமானுலும் ஏற்படலாம். அவ்விதம் அனிஷ்ட ஸாதனமாகாத போனுலும் ஷோடசிக்ரஹணம் முதலிய நிஷேதிக்கப்படும் விஷயம் அது செய்தாகவேண்டிய ஆவச்யகமில்லை. அதைச் செய்யாமல் போனுலும் இஷ்டசித்திக்குக் குறைவில்லை என்று சொன்னுலும் அதிலிருந்து விலக்குதல்புருஷனுக்கு ஏற்படலாம். அனுவச்யமாக சிரமமான இந்தக் காரியத்தைநாம்

செய்வானேன் என்று புருஷன் அதிலிருந்து விலகலாமல்லவா? அதைக்கொண்டே புருஷனை அதிலிருந்து விலக்குவதாகியதனது பிரயோஜனம் ஏற்படும்பொழுது நிஷேதவாக்யத்துக்கு அது அநிஷ்ட ஸாதனம் என்றும் விஷயத்தில் கூட கருத்து எதற்காக ஒப்புக்கொள்ளவேண்டும். அதனுல்தான் ஷோடசிக்ரஹணம் இல்லாமலே யாகம் பூர்த்தியடைந்து விடுகிறபடியால் **கஷ்டம் கர்ம** என்கிற நியாயப்படி கஷ்டமாகிய ஷோடசிக்ரஹணம் என்றும், கர்மவிசேஷத்தில் வேதமே ஷோடசிக்ரஹணத்தைச் செய்என்று விதித்தாலும்,

प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते ।

பயனைக்கருதாது மந்தனும் பிரவிருத்திக்கமாட்டான்' என்கிற நியாயப்படி அதிகாரி பிரவிருத்திக்கமாட்டான் அதை விதித்த வேதவாக்யத்திற்கு அநனுஷ்டான லக்ஷணமான (அனுஷ்டிக்காமல் போவதாகிய) அப்ராமண்யம் நேரிடும் என்கிற அபிப்பிராயத்தால் ஷோடசிக்ரஹணத்தை விதித்த வேதவாக்யத்திற்கு அதைச்செய்தால் கொஞ்சம் பலத்தில் ஆதிக்யம் உண்டு. செய்யாமல் போனுல் யாகம் பூர்த்தியை அடைந்து அதன்பலம் ஏற்படுவதாயிருந்தாலும் அதைச் செய்தால் அதிக பலம் கிடைக்கும் என்கிற கருத்து சாஸ்திரக்ஞர்களால் சொல்லப்படுகின்றது. அப்பொழுது அதிக பலத்தை விரும்பாதவர்கள் ஷோடசிக்ரஹணத்தைச் செய்யாதபோனுலும் அதிக பலத்தை விரும்பினவர்கள் அதை அனுஷ்டிப்பார்களானபடியால் அதை விதித்த வேதவாக்யத்திற்கு அனனுஷ்டான லக்ஷண அப்ராமாண்யம்வராதுஎன்று கருத்து. ஆதலால் கீழ்காட்டியவாறு ஷோடசிக்ரஹணம் வேதத்தினுல் அனிஷ்டஸாதனமென்று தெரிவிக்கப்படாதபடியால் அது அதர்மமாக ஆகமாட்டாது. ஈண்டு ஸ்வர்க்கம் நரகம் முதலியதர்மாதர்மங்களின்பலங்கள்வேதத்தினுல்போதிக்கப்பட்டபோதிலும் அதுகளே ஸ்வயம் இஷ்டாநிஷ்ட ரூபங்களாததால் இஷ்டநிஷ்ட ஸாதனங்களாகாதபடியால் அதுகள் தர்மாதர்மங்களாது. அன்னம் விஷம் முதலியதைப் புஜித்தால் அது இஷ்டத்தையும் அனிஷ்டத்தையும் கொடுக்கும் என்பது லோகத்திலேயே தெரியுமானதால் அது வேதத்தினுல் தெரிவிக்கப்படாதபடியால் அதிலேயும் தர்மாதர்ம லக்ஷணத்திற்கு அதிவ்யாப்தி தோஷம் கிடையாது.

சியேன யாகம் வேதத்தினால் சத்ருவதமாகிய இஷ்டத்திற்கு ஸாதனமென்று போதிக்கப்பட்டபடியால் அது தர்மமே. சத்ருவின் மாணத்திற்கு அனுகூலமான சஸ்திரத்தினால் சத்ருவைக் கொல்லுதல் முதலான ஹிம்ஸாரூபமான அபிசாரமாகிய சியேன யாகத்தின் பலமே அனிஷ்டத்தைக் கொடுப்பது. அதுவே வேதத்தினால் அனிஷ்டஸாதனமென்று போதிக்கப்படுவதால் அதர்மம். சியேனம் அதர்மமன்று. அது ஸ்வயம் ஹிம்ஸாரூபமாகாதபடியால் ஹிம்ஸையைத்தானே சாஸ்திரம் தடுத்திருக்கிறது. சியேனம் ஸ்வயம் ஹிம்ஸையாகாது அதன் பலமாகிய அபிசாரந்தானே ஹிம்ஸை. அதனால் அதுதான் அதர்மம். **वैरिमरणकामो यजेत** சத்ருவின் மரணத்தை விரும்பினவன் இந்த யாகத்தைச் செய்பக்கடவன் என்று எந்த யாகவிசேஷம் விதிக்கப்படுகின்றதோ அந்தவிடத்திலும் விதியினால் இது சத்ரு மாணமாகிய இஷ்டத்திற்கு ஸாதனமென்று போதிக்கப்பட்டபடியால் இந்த யாகம் தர்மமே. போலகம், ரமாசாஸ்திரிகள்.

---

# ஓர் தூஷண தூஷணம்.

31-5-31 ல் உள்ள கும்பகோணம் மாத்வமித்திரன் என்பதான ஒருபத்திரிகையில் 28-4-31 யன்று உத்தராதிமடம் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்பு புதுக்கோட்டையில் ஸ்ரீமான் காளி ரெங்காச்சாரியார் என்று விசிஷ்டாத்வைதபண்டிதரை வரவழைத்துபேசிக்கொண்டிருந்ததில் பல வார்த்தைகள் நடந்ததாயும் எழுதி ஏதோ த்வைதமதத்தையே உலகம் பூராவும் பரவப்படுத்திவிடுவது போலவும் எழுதி என்னையும் அனுவசியமான சப்தப்ரயோகங்களால் தூஷித்திருப்பதையும் கண்ணுற்றேன்.

ஷை வியாசம் எழுதினவர் தூஷணையான சப்தங்களை ப்ரயோகத்ததில் இருந்தே ஷையாருடைய ஞானம் எவ்வளவு என்பதை அறிந்துகொண்டு ஷை வியாஸத்திற்குப் பதில் எழுதவேண்டிய அவசியமில்லை என்று எண்ணியிருந்தாலும் முக்கியமான சில அம்சங்களுக்கு இந்த தடவை மாத்திரம் நடந்தபடி எழுதி இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

மாத்வமித்ரனில் எழுதினவர் ஸ்ரீ ஸ்வாமிகளுடன்கூட புதுக்கோட்டையில் நான்ஸ்வாமிகளுடன் பேசிக்கொண்டிருக்கும் காலத்தில் இருந்தவால்லவென்று நன்றாய் தெரிகிறது. நடந்த விஷயங்களை நன்றாய் கேட்டுக்கொண்டிருந்தால் நான் சொல்லாததையும் விருத்தமானதையும் எழுதியிருக்கமாட்டார். ஸ்ரீஸ்வாமிகள் என்னை கூப்பிடவில்லை நான் வந்த மடாதிபதிகளை தரிசனம் செய்து ஸல்லாப வேதாந்த விசாராதிகளை செய்துவரவேண்டியது சாஸ்திரம் என்று எண்ணி நேரில்போனபோது அங்கிருந்தவர்கள் ஸ்ரீஸ்வாமிககு என்னை இன்னுரென்று தெரிவித்தபிறகு அடியில்கண்ட பிரச்னைகளை ஸ்ரீஸ்வாமிகள என்னை கேட்டதற்கு நான் பதில் கீழ்க்கண்டவாறு சொன்னதுண்டு.

ஸ்வாமிகள்:—ஜனமித்ரனிலும் ஆர்யதர்மத்திலும் அத்வைத மதசார்பாக ஏன் தங்களுடைய வியாஸங்களை எழுதினீர்கள்?

உத்தரம் ரெங்காசாரியர்:—என்னை ஒருவர் கேழ்ப்பதற்கு இடமாயும, நான பதில் சொல்லக்கூடியதாயும நான ஒரு மதத்தை தூஷிப்பதாயும் எழுதவில்லையெனபது அந்த பத்திரிகைகளை பார்த்தவர்களுக்கு நனறாய் விளங்கும. அன்னியமதஸ்தர்கள் தங்கள் கிரந்தங்களில் எழுதியிருப்பதை படித்துப்பார்த்ததை எழுதியிருக்கிறேன் எனறு எழுதினேன். இம்மாதிரியான விஷயஙகளை எவ்வளவுகாலம எழுததுமூலமாய் எழுதினுலும் முடிவுபெருது என்பதையும் எழுதயிருக்கறேன். மூனறு மதஸ்தர்களும சேர்ந்து ஒரு சபை ஏற்படுத்தி என்னை அந்த சபைமுன் கேட்டால் உடனே தோஷமில்லாமல் நான் எழுதியிருபபதை யுக்தமாகவே சாஸ்திரபூர்வமாக நிரூபித்து சபையார்களை ஒப்புக்கொளளும்படி செய்கிறேன் எனறும எழுதியிருக்கிறேன் இப்பொழுதும் அதே மறுமொழிதான்.

ஸ்வா:—ஆனுல் உங்கள் மதாசாரியாளிடத்தில் நம்பிக்கையில்லையா?

ரெங்.—பூர்ண நம்பிக்கைதான் அந்தந்த மத கிரந்தங்களை அந்தந்த மதஸ்தர்கள் படிக்கவோ கேட்க்கவோ வந்தால் அந்தந்த மதங்களுடைய தத்வார்த்தத்தை நன்றாய் உருதியாகவும் சத்தியமாகவும் சொல்வேன்.

ஸ்வா:—அப்படிச்சொன்னால் மதத்தில் ஊக்கம் எப்படி?

ரெங்:—மூன்று மதஸ்தர்கள் முன்னிலையில் மதவிஷயங்களான உபன்யாஸம் ஏற்பட்டால் அந்த மதத்திற்கு அந்த யுக்தி சாஸ்திரம் இந்த மதத்திற்கு இந்த யுக்தி இந்த சாஸ்திரம் என்றுதான் சொல்லவேணும். தனியாகஒருமதஸ்தர்மாத்திரம் வேதாந்த பாடத்திற்கு ஏற்பட்ட நிபந்தனை முன்னிட்டுக் கொண்டுவந்து கேட்டால் வீட்டிற்குள்ளோ மடத்திற்குள்ளோ அந்த மத சாஸ்திரப்படி அர்த்தங்களைச்சொல்லி அன்னியமத யுக்திகளைக்காட்டிலும் இந்த மதஸ்தருடைய யுக்தி இந்த விஷயத்தில் நன்றாய் இருக்கிறதென்று சொல்வேன்.

ஸ்வா:—ரகஸ்யத்தில் இம்மாதிரிசொல்வதினால் என்னபயன்?

ரெங்:—நீங்கள் இதுவரையில் எந்த மதஸ்தர்களை ரகஸ்யத்திலாவது பஹிரங்கமாகவாவது வேதாந்த பாடம்சொல்லி திருப்பி உங்கள் மதத்தில் சேர்த்திருக்கிறீர்களா? தவிர இன்னொரு மதஸ்தர்கூட இருக்கும் காலத்தில் வேதாந்தபாடம் சிஷ்யனுக்குச் சொல்ல ஆரம்பவித்தால் கிரந்தத்தில் ஒரு வரிகூட பாடம் நடைபெறாது ஏனெனில் கூடயிருப்பவர் மேல் கக்ஷி சொல்லுவர் அதற்கு சமாதானம் குருவுக்கு உடனே சமாதானம் சொல்லக் கூடியதாயும் ஆயஸித்து சொல்லக்கூடியதாயுமிருக்கும். அப்போது சிஷ்யர்களுக்கு குருவினிடத்திலும் வேதாந்த க்ரந்தத்திலும் சிரத்தைகுறைவு ஏற்படுவதுடன் பாடமும் நடைபெறாது என்று எண்ணி வேதாந்தபாடம் ரகஸ்யத்தில்த்தான் உபதேசிக்க வேணுமென்று சாஸ்திரத்திலும் சம்பிரதாயத்திலும் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

ஸ்வா.—அத்வைதிகள் சொல்லவேண்டிய கக்ஷியை விசிஷ்டாத்வைதியான நீங்கள் எப்படிச்சொல்லுகிறீர்கள் என்னுடன் சேர்ந்து நீங்களும் அந்த மதத்தை கண்டிக்கவேண்டாமா?

ரெங்:—இது சாஸ்திரக்ஞர்கள் கேழ்க்கும் கேழ்வியல்ல. ஒருவேதம் அத்தியயனம் செய்துபிறகு மற்ற வேதங்களையும் பிராமணாள் அத்தியயனம் செய்வது சாஸ்திரம் என்று ஏற்பட்டு நாலு வேதம் ஒருவரே தெரிந்துகொள்வதுபோல் விசிஷ்டாத்வைதம் நன்றா ஆசாரியாளிடம் உபதேசம்பெற்றபிறகு மற்ற வேதாந்தங்களையும் தெரிந்துகொள்வது சாஸ்திரமானதால் நான் பெரிய

சபையில் வெகு காலமாய் அநேகமாய் எல்லா சாஸ்திரங்களுக்கும் வேதாந்தங்களுக்கும்பரீக்ஷாதிகாரியும்தானுகிகாரியாயுமிருப்பதால் கூடியவரை எல்லா சாஸ்திரங்களையும தெரிந்துகொண்டிருப்பதால் மூன்று மதங்களும் எனக்குசமமாகவே இருப்பதாலும் மூன்று மதஸ்தர்களுக்குள் இக்காலத்தில் அவாந்திர கலகம் இல்லாம லிருக்கவேணுமென்கிற அபிப்பிராயத்தை முன்னிட்டு ஒரு மதத்தை ஒருவர் தூஷித்து எழுதினால் மற்றொரு மதஸ்தர் அந்த மதத்தைத்தூஷித்து தங்கள் மத கிரந்தங்களில் எழுதியிருக்கிறதை எடுத்துக்காட்டவேண்டிவருகிறதென்பதை முன்னிட்டுமாத்திரம வியாஸம் எழுதினேன். விசிஷ்டாத்வைதியானாலும் மற்ற மதங்களைக் கற்கக்கூடாதென்றும் விவாதம நேரிட்டால் பதில் சொல்லக்கூடாதென்றும் சாஸ்திரமா? இதற்குள் சந்தியாகாலமாகிவிட்டதால் சபை கலைந்துவிட்டது.

மறு நாள் சாயங்காலம் போய் லோகரீதியாக ஸ்வாமிகளுடன் பேசிக்கொண்டிருக்கையில் புதுக்கோட்டை காலேஜ்ப்ரொபஸர்களான ஸ்ரீமான் பஞ்சாபகேசய்யர் M.A.,L.T, அவர்களும் சிதம்பரய்யர் M.A.,L.T. அவர்களும் ஸ்ரீ ஸ்வாமிகளைத்தரிசிக்க வந்தார்கள். அந்த சமயம் ஸ்ரீ ஸ்வாமிகளுடன் அத்வைத விசாரம் அழகாகச் செய்துகொண்டிருந்தார்கள்' அந்தசமயம "தத்வமஸி" என்கிற வாக்யார்த்த விசாரம் நேர்ந்தது. அச்சமயம் பண்டிதர்களே சொல்லக்கூடியதான கேள்விகள் ஸ்வாமிகள் கேட்டபடியால் நானே அத்வைத மத ஸ்தாபனமான யுக்தி சாஸ்திரங்களை நிரூபிக்க வேண்டியதாக நேர்ந்துவிட்டதால் ஸ்ரீ சங்கராசார்யாளுடைய பாஷ்யத்தில் உபபாதித்து இருக்கிறவைகளை ஸ்வாமிகளுக்கு பதில் நானே நன்றாக தமிழில் சபையில் இருந்தவர்களுக்கு எல்லாம் தெறியும்படியாக உபபாதித்து அத்வைத மத ஸித்தாந்தத்தையே முடிவாக வாக்யார்த்தம் சொல்லி பூர்த்திபண்ணினேன். இப்போது அத்வைத விசாரம் ஆரம்பித்த ஷை 2 பேர்களும் என்னைப்பற்றி ஸ்வாமிகள் முன்பு புகழ்ந்து இம்பாதிரியே மூன்று மதமும் எங்கள் தானுகிகாரியான இந்த காளி ரெங்காசாரியார் அவர்கள் நன்றாய் போதிப்பார் என்று சபையில் சொல்லி ஸந்தோஷப்பட்டார்கள். இதுதான் புதுக்கோட்டையில் 2-நாளும் நடந்தது. ஷை 2-ப்ரொபஸருக்கும் மற்றவர்களுக்

கும் அத்வைதம் அவைதிகந்தான் என்று ஸ்வாமிகள் முன்னிலையில் நான் வாக்யார்த்தம் சொன்னதற்கு சாக்ஷியம் சாயங்காலம் ஆகிவிட்டதால் சபை கலைந்தது. ஏதோ 'அத' சப்தார்த்தம் மங்களம்தான் என்று எழுதினதை தூஷணம்போலும் அதற்கு சமாதானம் போலும் சில வாக்யங்களையும் அமரகோசத்தையும் எழுதி என்னையும்தூஷித்து எழுதியிருப்பதற்கு சொல்பபதில்மத்வபாஷ்ய கிரந்தத்தில் மங்களம் அர்த்தம் என்று எழுதியிருந்தாலும்மங்களம் தான் அர்த்தம் என்று கொள்ளவேண்டும்.

अन्यायश्चानेकार्थकत्वं । अम्भक्षो वायुभक्षः ।

सकृदुच्चरितः शब्दः सकृदेवार्थं गमयति । सर्वं वाक्यं सावधारणम् ॥

இது முதலான நியாயங்களாலும் ஷை மத்வபாஷ்யத்திற்கு மங்களம் தான் என்கிற அர்த்தம் சேர்த்து சொல்லத்தான்வேணுமாதலால் பாஷ்யத்தினுடைய அர்த்தம் தெரிந்துகொள்ள பல சாஸ்திரக்ஞானம் வேண்டியிருப்பதால் நான் சொன்ன அர்த்தமே ஞாயத்தால் ஒத்துக்கொள்ளக்கூடியது. பிசகு என்று எழுதினது சாஸ்திர அறியாமையைக் காண்பிக்கிறது.

தவிர பேதத்தையே ராமானுஜாசார்யர் சொல்லியிருக்கிறார் என்று நான் சொன்னதாக மாத்வமித்ரனில் எழுதியிருப்பது பிசகு.

விசிஷ்டாத்வைதிகளும் அத்வைதிகளும் ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். விசிஷ்டாத்வைதிகளுக்கும் விசேஷியமான மதம் அத்வைதமே. த்வைதத்திற்கு ஏற்பட்ட பேதங்கள் மற்ற 2-பேர்களும் ஒப்புக்கொள்ளவில்லை. அப்படிக்கு இருந்தால் அத்வைதம் 1. துவைதம் 2. இந்த மதத்தைத் தவிர விசிஷ்டாத்வைத மதத்திற்கு இடமில்லாமல் போய்விடும் என்பது பிரஸித்தமே. கேவல பேதவாதிகள் த்வைதிகள் தான். நிற்க எவ்விடத்தில் எந்த சுருதி ஸ்மிருதிக்கு அத்வைதிகளால் அத்வைத பரமாக அர்த்தம் சொல்ல முடியாமலிருந்து "அத்வைதம் அவைதிகம்" என்று உங்களால் ஸ்தாபிக்கப்பட்டதைதெரிவித்தால் நான் அதற்கும் உத்தரம் சொல்லி நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன்.

இன்னும் அமாகோசத்தைக்கொண்டு பல அர்த்தமுள்ள ஒரு சப்தத்தை ஒரு இடத்தில் பிரயோகித்திருந்தால் அந்த இடத்தில் ஒரு அர்த்தம்தான் அந்த ப்ரகாணத்திற்கு ஒத்திருப்பதை எடுத்துக்கொள்ள வேணும் என்கிற சாஸ்திரமரியாதையை மறந்து பல அர்த்தங்களை ஒரே இடத்தில் சொல்லலாமாகில்

श्रीमन्मध्वमते हरिः परतरः என்றது போலிடங்களில்

यमानिलेन्द्र चन्द्रार्क विष्णुसिंहांशुवाजिषु ।

शुकाहि कपिभेकेषु हरिर्ना कपिले त्रिषु ॥

என்கிற கோசத்தை முன்னிட்டு ஹரி: என்கிற பதத்திற்கு யமன் இந்திரன் பாம்பு குரங்கு இவைகள் முதலானவைகள் பரதான் என்று சொல்லலாமா? ஆனதால் ஆத என்பதற்கு மங்களம், ஆநந்தரியம் என்று பல அர்த்தங்கள் ஒரே இடத்தில் எப்படி பண்டிதர்கள் ஒப்புக்கொள்ளக் கூடும்.

வீணாக ஆக்கிரப்பட்டு ஒருவர்க்கொருவரை தூஷிப்பதால் என்ன பயன்? இனியாவது நேரில் நன்றாய் பார்க்காததையும் கேழ்க்காதவைகளையும் விருத்தமானவைகளையும் தூஷணமாகவும் எழுதாமல் இருப்பாரென்று எண்ணி இத்துடன் சமாதானத்தை நிறுத்திக் கொள்ளுகிறேன்.

அத்வைதிகளும் த்வைதிகளும் வியவஹாரம் பண்ணுங்காலத்திலே துவைதிகள் முன்பு அத்வைதிகள் கிரந்தத்தில் சொல்லியிருக்கிற சமாதானம் சொல்லுங்காலத்தில் விசிஷ்டாத்வைதிகளின் கிரந்தத்தில் ஏதோ ஒருவிதமான சமயத்தில்பிரச்சன்னபௌத்தர் என்று சொல்லவில்லையாவென்ற கேழ்வை உசிதமல்லவென்பதையெல்லோரும் அறியலாம், நான் இப்போது அத்வைதியாகவிருந்து பதில் சொல்லுகிறேனென்றுதான் பதில் சொல்லி இருக்கிறேன்.

காளி. ரங்காசாரியார்.

தானுதிகாரி.

புதுக்கோட்டை.

---

# வேதங்கள் த்வைதத்தைப்ரிதிபாதிக்கின்னவா? அல்லது அத்வைதத்தை வெளியிடுகின்றனவா?

(பாரதீபுத்திரன் எழுதியது)

வேதத்தில் காணப்படும் அனேக வாக்யங்கள் த்வைத ஸித்தாந்தத்தின் ஸ்வரூபமாகிய பேதத்தைப் போதிப்பதாலும் அபேதத்தைப்போதிப்பவைகள் மிகவுங் குறைவாகஇருப்பதாலும்அவைகளுக்கு சொல்லப்படும் அபின்னார்த்தமும் லக்ஷணையை ஆச்ரயித்ததாக இருப்பதாலும் "வேதங்களுக்கு அத்வைதத்தில் தாத்பர்யமில்லை" என்று சொல்லும் ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளுக்கு நாம் சொல்லும் பதிலாவது:—

வேதங்கள் திருஷ்டமான பதார்த்தத்தை வெளியிடுமாயின் அவைகளுக்கு விசேஷ ப்ரயோஜனம் இருக்கமாட்டாதென்றும் இதுவரை கிட்டாததாயுள்ள அதிருஷ்டமானவைகளைப் போதிப்பதன் காரணமாக அவைகளுக்கு நாம் பிராமாண்யத்தை அங்கீகரிப்பதாலும் திருஷ்டமான பேதத்தைத் தெரிவிக்க வேதவாக்யங்கள் அவச்யமில்லையென்றும் வ்யாவஹாரிகமான பேதத்தைச் சொல்லும் வேதவாக்யங்கள் வ்யவஹாரதசையிலுள்ளவனுக்கு உத்தேசிக்கப்பட்டதென்றும் வேதங்களின் பரமதாத்பர்யமாக பேதத்தை அங்கீகரிப்பது ஸரியலலவென்றும் தேசகாலாதிகளை அனுசரித்து லக்ஷணை முதலான முறைகளால் வெளியிடப்படும் அர்த்தங்கள் தவறுனவை என்று கூறுதல் முற்றிலும்பொருத்தமற்றதாதலாலும் பேதபோதகமான வாக்யங்கள் துர்பலங்கள் என்றும் அத்வைதத்தை விளக்குபவைகளுக்கு பிராபல்யம்இருப்பதாகவும் கூறுவதாலும் முதல், மத்தி, அந்தத்திலுள்ள வாக்யங்கள் அத்வைத பரமாக இருப்பதாலும் வேதங்களின் தாத்பர்யம் அத்வைதமே.

தற்சமயம் இருந்துவரும் ஒரு நிலைமையைக் காட்டிலும், ஒரு காலவிசேஷத்தில் வேறான நிலைமை ஏற்படலாம் என்று ஒருவர் அபிப்பிராயப்படுவது ஸரியல்லவென்று யாரேனும் சொன்னால் அது வைக்ஞானிக சாஸ்திரமுறைக்கு ஒத்ததல்ல என்பது தெளிவானதே.

மேலும் பல இடங்களில் நடைபெற்ற ஸபைகளிலிருந்து அத்வைதத்தை அவைதிகமென்று ஸ்தாபித்துவிட்டதாகச் சொல்ல முடியாது. அதற்கு மாறான ஸித்தாந்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆக்ஷேபங்களுக்கு பதில் கூறாமலே யாரோ சிலர் அத்வைதம் அவைதிகம் என்று கூறுவதாலும் புஸ்தகங்கள் பல வெளியிடுவதாலும் அத்வைதம் நிராகரிக்கப்பட்ட மதமாக ஆகிவிடுவதில்லை.

ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகளின் மனதில் நினைத்துக்கொண்டிருக்கும் வண்ணம் அவருக்கு திருப்திகாமாக பதில் சொல்லப்படவில்லை என்று ஒருக்கால் வைத்துக்கொண்டாலும் பதில் கூறுபவரின் திறமைக்குறைவால் அத்வைத ஸித்தாந்தமே தவறானது என்று சொல்ல முடியாது.

இதே சமயத்தில் எவ்விதம் ஒரே நபராகிய ஸ்ரீ உத்திராதி ஸ்வாமிகள் அத்வைதம் அவைதிகம் என்று அபிப்பிராயப்படுகிறாரோ, அதற்கு நேர்விரோதமாக கணக்கிலடங்காதவர்கள் "ஸ்ரீ உத்தராதி ஸ்வாமிகள் தனது சொல்லை ஸ்தாபிக்க முடியவில்லை என்றும் ஸரியாக பதில் சொல்லத்திறமையற்றவர் என்றும் அபிப்ராயப்படுவதிலிருந்து ஸ்ரீ உத்திராதி ஸ்வாமிகளுடைய ரீதியை அனுசரித்து நாம் ஆராய்ந்தாலும் அவரது வார்த்தை பலம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

பிரயோஜனமற்ற இவ்விஷயத்தில் ஸ்ரீ த்வைதாசாரியர் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தால் அதற்கு மாறான ஆக்ஷேபங்களும் நிற்கப்போவதில்லை. இதனால் உருவான பிரயோஜனமும் ஏற்படப்போவதில்லை.

ஸ்ரீ த்வைதாசாரியாள் தனது பரம்பரையான சிஷ்யர்களுக்கு தனது ஸித்தாந்தத்தை உபதேசம் செய்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறோம்.

சிஷ்யரல்லாதவர்களை சிஷ்யர்களாகக் கருதுதல் தனது கடமை என்றெண்ணி, அவர்களது தற்போதைய மதங்கள் அவர்களை பாழ்படுத்துமென்று சொல்லி, பிறர் மதங்களைத் தாக்கினால் அமைதியின்மை ஏற்படுமென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

# வாரவிருத்தாந்தம்

நாலுபுறமும் தீ:—வைதிக தர்மமென்பது ஓர் கல்பலதை. அது அழியாதது. அது வாடியபோது அதை வளர்க்க வருவதாக வைகுண்டவாஸி வாக்களித்துளான். இதில் பூர்ண நம்பிக்கையில்லாமலில்லை. ஆயினும் தர்மத்திற்கு க்லானிவரும்போது நம்மையறியாமல் மனதிற்கு நம் பிராணனுக்கே ஆபத்து வந்தது போல் ஓர் தாபமுண்டாகிறது. என்செய்யலாம். சுதேசஸமஸ்தானங்களில் கொஞ்சம் தர்மம் தாண்டவமாடுகிறதென எண்ணமிருந்தது. அவர்களே தர்மதேவதையை வதைக்க முன் வருகின்றனர். பெண்கள் சில காரணங்களால் அக்னிபுரஸ்ஸரமாக பாணிக்கிரஹணம்செய்த கணவனைவிட்டுவிட்டு வேறொருவனை மணக்கலாமாம். இவ்விவாகரத்து சட்டத்தை பரோடா அரசரும் ஆதரிக்கிறாராம். என்செய்வது? யாரை நொந்துகொள்வது? இப்பாபபூமியை மிதியாதுநிற்க கௌடபாதரைப்போல் சக்திபெற்றுளோமில்லை. எங்கு செல்வது? ஹா! கர்மஸ்வரூப! பகவன்! நீயே சரணம் சரணம்.

---

எத்தனைபேர் மாறினாலென்ன? நாகபுரிக்கருகில் 100 கல் தச்சர்கள் மகம்மதிய மதத்தைத் தழுவினராம். இன்னும் 200பேர் மாறப்போகின்றனராம். பாரததர்மமெனும் கடலில் ஓர் உத்தரிணி தீர்த்தம் புறப்படுத்தப்பட்டது. ஆயின் மதக்கடல் வரண்டுவிடுமோ? ஐஹிகத்தையே முக்யமாகக் கருதுவோர் கவனிக்கட்டும். உங்களைத் தாழ்த்திவிட்டார் வைதிகர், நாங்கள் தூக்குகிறோம் எனக்கூறி அவர்களைக் கிளப்பிவிட்டது நீங்கள். ஸமயம் பார்த்து தங்களுக்கு பலந்தேடுகிறாரன்யர். ஆதலின் தர்மபுத்தி இருந்தால் வீண்பேச்சாடம்பரமின்றி தாழ்ந்தவர்களுக்கு ஆஸ்திகத்தைப்புகட்டி குளம் கோயில் முதலிய ஸௌகரியம் தனியாக செய்யுங்கள். அன்யமதம் புகுந்தோர் திரிசங்குவை நினைப்பாராக.

---

அங்குதான்வந்துநிற்கும்:—அஜர்பாய்ஜான் என்ற ருஷியா வுக்கருகிலுள்ள விடத்தில் புருஷர்கள் வீட்டிலிருந்து கிருஹ வேலையை கவனிக்கவேண்டுமேயல்லாது உத்தியோகத்திற்கோ சண்டைக்கோ வேறெந்த தொழிலுக்கோ வெளியில் செல்லலா காதாம். புருஷனுக்கு போகத்திற்கேற்ற சக்தி குறைந்தவுடன் இரண்டு சாக்ஷிகளை வைத்துக்கொண்டு அவரை துரத்திவிடுவார் களாம். பெண் சுதந்திரம் விரும்புவோர் கடைசி இக்காக்ஷியை அனுபவிக்கலாம். நம் நாட்டிற்கு வேண்டாம்.

---

நாகரீகத்தால் குலைந்தது:—ஜால்ஷேன் என்ற இதா தேசத் தில் பஞ்சாயத்து ஸபையார் கல்யாணத்திற்காகப் பணம் கொடுத்து வாங்குவதைக்கண்டித்து ஸம்ப்ரதாயமென்றால் இரண் டணாகொடுத்து மணம் செய்துகொள்ளலாம். மீறுபவர் ஸமூக பஹிஷ்காரம் செய்யப்படுவர் என தீர்மானித்தனர். நமக்கு இதைவிட அதிக நற்காரியம் செய்துவந்த ஸமூக ஒற்றுமை இருந்தது. அதிருந்தால் வரதக்ஷிணை ஒருநாள் விவாகம் முதலிய வைகளை அகற்றலாம். நவநாகரீகம் வந்துவிளைவித்த தீங்குக ளில் இதுவுமொன்று. ஒற்றுமையை இழந்து கட்டுக்கடங்காது போனோம்.

---

நானூறென்ன? அதிகமே:—ஹைதராபாத்தைச்சார்ந்த ஷிசர் புரி என்ற டிவிஷனில் மாத்திரம் 400 பால்யவிவாகம் நடந்ததாம். ஐவர்பேரில் சாரதாசட்டப்படி வழக்கு தொடரப்பட்டுளதாம். தர்மாபிமானிகளுக்கு கஷ்டமிராது. இப்போதும் மதாபிமானத் துடன் பால்ய விவாஹம் செய்வோர் நானூறல்ல நாற்பதினாயிரம் பேராவது இருப்பர். ஆதலால்தான் ஆஸ்திகர் மனம் புழுங்கி சாகாமலிருக்கின்றனர்.

---

உண்மை ப்ரதிநிதியா? காங்க்ரஸோ ஏனைய ஸபைகளோ தாங்கள் கிராமஜனங்களுக்கு ப்ரதிநிதி என்று சொல்லத்தவருவ தில்லை. கிராமவாஸிகளின் உண்மையான எண்ணத்தை அறிந்து அதன்படி நடக்கும் ஸபை மருந்துக்குக்கூட கிடைப்பதில்லை.

கோயம்புத்தூரைச்சார்ந்த குஹலூர் என்ற கிராமத்தில் புதிய
காருண்யரஸம்பூரிதரோர்கவுண்டர்தன்கிணற்றை தீண்டாவர்ருக்கு
ஜலமெடுக்கவிட்டார். அக்ராமவாஸிகளான மற்றவர்சொல்லியும்
பிடிவாதமாய் செய்ததால் கட்டுப்பாடாக அவர் நிலத்தை உழுவ
தில்லை. அவர் வீட்டில் வேலை செய்வதில்லையென தீர்மானித்
தனர். அவர்களைச் சொல்வானேன். அநேகந்தீண்டாதா
ர் "நமக்கேன் அந்த பாபம்" என்றுகூறி விலகி ப்ராமணரை
யும் விலகச்சொல்வதை க்ராமாந்தரங்களில்காண்கிறோம். இதை
கவனியாது தான் கௌரவமடைவதற்காகப் பேசுவதும் சட்டம்
செய்வதும் நியாயமாகாது. போலிவேஷக்காரர்கள் இதையெல்
லாம் கவனிப்பாரா?

---

கேடுப்பவர் யார்? தேவக்கோட்டைக்கருகில் ஓர் சண்டாள
ஸபைகூட்ட ஏற்பாடு செய்திருந்தனர். பள்ளர் நாடார் முத
லிய அந்த ஜாதிக்கிளைகுப்பார்கள் தங்கள் ஜாதிவழக்க ஒழுக்
கங்களைக் கண்டித்து ஒன்றாகிவிடும்படி கூறும் இச்சபை உபதே
சத்தை ஏற்க மறுத்து ஷெ சபையை அரசாங்க அவசரச்சட்ட
மூலம் தடுத்துவிட்டனர். சாந்தமாக இருப்பவர்களைக்கூட்டி
துன்பமார்க்கத்தை உபதேசிப்பவர் நாகரீக தேசாபிமானிகளே.
ஜாதிவேண்டாமெனக்கூறி ஒவ்வொரு ஜாதி ஸபையையுங்கூட்டி
பாலர்ஸபை பெண்ஸபை என மூன்றாக்கி தனக்கிஷ்டமான தீர்மா
னத்தை நிறைவேற்றுபவர்களுமிவர்களே. ஸமீபத்தில் அம்பட்
டர் ஸபையை கூட்டப்போகின்றனர், இவர்களுக்கு நல்லறிவைக்
கடவுள் அளிப்பாராக.

வே. ஸோமதேவ சர்மா.

---